முருகப்பெருமான் துணை

**மகான் மார்க்கண்டேயர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.06.2022, புதன்கிழமை

1. ஞானத்தலைவனின் சக்தி மிக்க
ஞானியாக வந்த அரங்கனே
தானதரும பலம் கொண்டநல்
தவராசனே ஞான தேசிகனே

2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
ஆசிபட சுபகிருது விடை திங்கள்
அறிவிப்பேன் மூவாறுதிகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 18 ம் நாள், 01.06.2022 புதன்கிழமை)

3. வாரமதில் மார்க்கண்டேயர் யானும்
வழங்குவேன் உலகநலம் காண
சோரமிலா மக்களை படைக்கவே
சுத்த நெறிதனை அருளியே

4. அருளியே அரங்கன் வழிநடத்தும்
ஆற்றல் மிக்க மார்க்கம் தன்னை
வரமென மக்கள் ஏற்றுமே
வணங்கித்தொடர உலகினில் மாற்றம்

5. மாற்றம் சாத்மீக சமதர்மமாக
(சாந்த குணமே வடிவான மக்கள், எப்போதும் பெருந்தன்மையாக இருப்பார்கள். சாத்வீக குணம் சமரச வாழ்க்கைக்கு, மிகமிக முக்கியமானதாகும். இவர்கள் மற்றவர்களை அனுசரித்து நடப்பார்கள், பண்புள்ள மக்களின் துணையோடு இருப்பார்கள். சமரச சுத்த சன்மார்க்க கொள்கையே சாத்வீக குணத்தினால் மட்டுமே அமைவதாகும் )
மறுமை விரட்டும் சக்தியாக
ஆற்றலாக நிலைகள் பெருகி
அனைவரும் ஞானிகள் ஆவர்

6. ஆவதுடன் கலித்துன்பங்கள்
அனைத்தையும் விரட்டியே
புவனம் காக்கும் சக்திகளாவர்
புண்ணியம் தழைக்கும் வண்ணம்

7. வண்ணமுடன் வளர்ச்சிக்கான
வழிவகைகள் மிகுதிசெய்து
எண்ணமெல்லாம் தருமமாக
எங்கும் எதிலும் நேர்மையாக

8. ஆகவே உலகோர் சிறந்து
அரங்கன் தேர்வு செய்யும்
மகான்களாகி நிலை உயர்வர்
மண்ணுலகில் இந்தவித அற்புதத்தை

9. அற்புதத்தை ஞானிகள் சூழ
ஆறுமுகனார் அரங்கன் வழி
ஏற்புகாண வேண்டி இனிதே
இவ்வித அவதார சூட்சுமம்

10. சூட்சுமம் நிகழ்த்தி இருக்க
சுருதிபடி (சுருதி – வேதம்) கண்டுணர்ந்துமே
சூட்சும வழி வந்தவர் எல்லாம்
சிந்தை தெளிந்து சடுதி

11. சடுதி அரங்கன் நோக்கமாக
சகலரும் ஞானிகளாகி
இடரில்லா ஞானயுகம் படைப்பர்
இயம்பிய அருளாசி முற்றே.

–சுபம்–

தர்மவான்கள் எப்போதும் தயை சிந்தையுடன் இருப்பார்கள். அவர்கள் சிந்தையில் தெளிவு இருக்கும். இவர்களைப் பற்றித்தான் மகான் மார்க்கண்டேயர் தனது நூலில் ‘‘எண்ணமெல்லாம் தருமமாக’’ என்று குறிப்பிட்டுள்ளார்கள். இப்படிப்பட்ட தர்மவான்கள் இருப்பதால்தான் இந்த உலகில் இன்னும் மழை பெய்து கொண்டுள்ளது என்பதை மகான் ஔவையார் தனது கவியில்,

**நெல்லுக்(கு) இறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்**
**புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் – தொல்உலகில்**
**நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்(டு)**
**எல்லார்க்கும் பெய்யும் மழை.**

**– மகான் ஔவையார் – மூதுரை – கவி எண் 10.**

என்று குறிப்பிட்டுள்ளார்கள். உயிர்க்கொலை செய்யும் மக்களுக்கும், புலால் உண்ணும் மக்களுக்கும் தயை சிந்தை இருக்காது. அவர்கள் சிந்தையில் தெளிவும் இருக்காது.

**படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றுஊக்காது ஒன்றன்**
**உடல்சுவை உண்டார் மனம்.**

**– திருக்குறள் – புலால் மறுத்தல் – குறள் எண் 253.**

ஓர் உயிரின் உடம்பைச் சுவையாக உண்டவரின் மனம் கொலைக்கருவியைக் கையில் கொண்டவரின் நெஞ்சம் போல் நன்மையாகிய அருளைப் போற்றாது.

– நன்றி மு.வரதராசனார்.

இவர்களுக்கு ஞானத்தினைப் பற்றிய புரிந்துணர்தலும் இருக்காது. இவர்களின் தெளிவற்ற சிந்தையினால் இவர்களால் மரணத்தை வெல்ல கூடிய உபாயத்தையும் அறிந்து கொள்ள முடியாமல் போய்விடும். இந்த நூலில் மகான் மார்க்கண்டேயர் குறிப்பிட்டுள்ள ‘‘ மறுமை விரட்டும் சக்தியாக’’ என்பதே மீண்டும் பிறவாமை என்பதாகும். மீண்டும் பிறவாது இருக்க வேண்டுமென்றால் அசுத்த

தேகம் நீங்க வேண்டும். சொர்ண தேகத்தையுடைய முருகப் பெருமானை வணங்கி ஆசி பெறாமல் அசுத்த தேகத்தை நீக்க முடியாது. இந்த சூட்சும உபாயத்தைத் தான் கும்பமுனி என்றும் குருமுனி என்றும் போற்றப்படும் மகான் அகத்தியர் போதித்து வந்தார்கள். மகான் முருகப்பெருமானின் ஆசியால், மகான் அகத்தியர் ஞானம் அடைந்து சித்தி பெற்றார். மகான் அகத்தியர் வழிவந்த நவகோடி சித்தர்களும் முருகப்பெருமானின் ஆசியினால் சித்தி பெற்று மரணமில்லாப் பெருவாழ்வை பெற்றார்கள்.

ஆற்றலாம் மார்க்கண்டேயர் அருளினைப் போற்றிட
ஏற்றமே வாழ்வில் இன்பம் உண்டாம்.

– முருகனடிமை ஆறுமுக அரங்கமகா தேசிகர்.